தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களின் மூத்த சகோதரர் சாய் சுந்தர் அவர்கள் காலமானதையொட்டி நேற்று (26.2.2026) அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் (கணக்கு மற்றும் தணிக்கை) க.தனசேகரன் ஆகியோர் உள்ளனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சகோதரர் எஸ்.விஸ்வநாதன் (எ) ரவி இயற்கை எய்தினார் தகவல் அறிந்த கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., அமைச்சர்கள் ஆவடி சாமு நாசர், ராணிப்பேட்டை ஆர். காந்தி ஆகியோர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜே.கோவிந்தராஜன், துரை சந்திரசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

கல்வராயன்மலையில் 5,695 பயனாளிகளுக்கு

ரூ.10.16 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது!

அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

கல்வராயன் மலை, பிப்.27 - கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன்மலை ஒன்றியம், கரியாலூர் கோடை விழா அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு 24.2.2026 செவ்வாய்க்கிழமை அன்று அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கல்வராயன்மலை பகுதி மக்களின் முன்னேற்றத் திற்காக அரசு தொடர்ந்து தனிக்கவனம் செலுத்தி வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் கல்வராயன்மலை வட்டம், கரியாலூரில் நடைபெற்ற விழாவில் அரசின் பல்வேறு துறை களின் சார்பில் பயனாளி களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரத் துறை, வேளாண்மைத்துறை, சமூகநலத்துறை, கூட்டுறவுத் துறை, தோட்டக்கலைத்துறை, மாவட்ட வழங்கல் அலுவலகம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 5,695 பயனாளிகளுக்கு ரூ.10,16,56,013/ மதிப்பீட்டில் வன உரிமைப் பட்டா, நத்தம்/நகர்ப்புற வீட்டு மனைப்பட்டா உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

கல்வராயன்மலைப் பகுதி மக்களின் முன்னேற்றத்தில் தமிழக அரசு தொடர்ந்து தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இதன்படி, வெள்ளிமலை சின்னதிருப்பதி சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.98.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இதே போன்று புதிய ஆய்வு மாளிகைக் கட்டடம் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பகுதி பழங்குடியின மக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று ஏற்கனவே கடந்த 4 ஆண்டுகளில் 3,516 வன உரிமைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் நடைபெற்ற விழாவில் 3,859 வன உரிமைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதி மக்களின் மிக நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்வராயன்மலை பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 12 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் இணைந்து "கல்ராயன்" உழவர் உற்பத்தியாளர் நிறுவன கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கல்வராயன்மலைப் பகுதியில் விளையும் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் "கல்ராயன்" என்ற பெயரில் கூட்டமைப்பு மூலம் உற்பத்தி செய்யப்பட்டப் பொருட்களை விற்பனைக்காக இன்றைய தினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் கல்வராயன்மலைப் பகுதி பொருட்கள் அதிக அளவு விற்பனை செய்ய வாய்ப்பாக அமைந்துள்ளது.

மேலும், கல்வராயன்மலைப் பகுதி மக்களின் பிற கோரிக்கைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், தமிழக அரசின் இதுபோன்ற நலத்திட்டங்களை இப்பகுதி பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் 61601 மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வன அலுவலர் பிரியதர்ஷினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ரமேஷ்குமார், கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் சி.முருகன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சுமதி, பழங்குடியினர் நல திட்ட அலுவலர் இ.அம்பேத்கர், கல்வராயன்மலை ஒன்றியக்குழு தலைவர் சி.சந்திரன், துணைத் தலைவர் ஜா.பாட்சாபீ, அனைத்து உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில்

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்! 5 ஆண்டு சாதனை விளக்க தொடர் பொதுக் கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

நாம் நாளும் உயிராய் போற்றி வணங்கும் கழகத் தலைவர் - திராவிட மாடல் நாயகர் - தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மார்ச் 1-ஆம் தேதி அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும், கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கும் விழா - ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கும் விழா மற்றும் தொகுதி வாரியாக கழக அரசின் 5 ஆண்டு சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக் கூட்டம் கீழ்க்கண்ட தேதிகளில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரப் படி சிறப்பு பேச்சாளர்களைக் கொண்டு நடைபெற உள்ளது

நாள்	நிகழ்ச்சிகள்/ கூட்டங்களில் உரையாற்றும் சிறப்பு பேச்சாளர்கள்.	நிகழ்ச்சி / கூட்ட ஏற்பாடு - ஒன்றியம்/ நகரம் / பேரூர்
1.3.2026 ஞாயிறு	காலை 9.00 மணியளவில் :- வட்டம் முழுவதும் அனைத்து கிளைக் கழகங்களிலும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் விழா	அனைத்து பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கிளைகள்
1.3.2026 ஞாயிறு	பகல் 12.00 மணியளவில் :- மாவட்டத்தில் உள்ள 31 ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்குதல்	அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகம்
1.3.2026 ஞாயிறு	பகல் 12.00 மணியளவில் :- சிவானந்த குருகுலத்தில் ஆதரவற்ற மாணவ - மாணவிகளுக்கு உணவு வழங்கும் விழா	மறைமலைநகர் வடக்கு நகர தி.மு.க.
1.3.2026 ஞாயிறு	பகல் 12.30 மணியளவில் :- பரனூரில் தொழுநோயாளிகளுக்கு உணவு - உடை வழங்கும் விழா	காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க.
1.3.2026 ஞாயிறு	பொதுக்கூட்டம் சிறப்பு பேச்சாளர் :- சே.மெ. மதிவதனி	தாம்பரம் தொகுதி - பெருங்களத்தூர் தெற்கு பகுதி இடம் :- பெருங்களத்தூர்
3.3.2026 செவ்வாய்	பொதுக்கூட்டம் சிறப்பு பேச்சாளர் :- திண்டுக்கல் ஐ.லியோனி	பல்லாவரம் தொகுதி செம்பாக்கம் வடக்கு பகுதி இடம் :- அஸ்தினாபுரம்
4.3.2026 புதன்	பொதுக்கூட்டம் சிறப்பு பேச்சாளர் :- தமிழ்கேள்வி தி.செந்தில்வேல்	திருப்பெரும்புதூர் தொகுதி - திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் இடம் :- சுங்குவார்சத்திரம்
5.3.2026 வியாழன்	பொதுக்கூட்டம் சிறப்பு பேச்சாளர் :- சைதை சாதிக்	திருப்போரூர் தொகுதி திருப்போரூர் வடக்கு ஒன்றியம் இடம் :- திருப்போரூர்
7.3.2026 சனி	பொதுக்கூட்டம் சிறப்பு பேச்சாளர் :- தமிழன் பிரசன்னா	செங்கல்பட்டு தொகுதி நந்திவரம் - கூடுவாஞ்சேரி நகரம் இடம் :- கூடுவாஞ்சேரி
11.3.2026 புதன்	பொதுக்கூட்டம் சிறப்பு பேச்சாளர் :- டாக்டர் எழிலன்நாகநாதன்	ஆலந்தூர் தொகுதி ஆலந்தூர் வடக்கு பகுதி இடம் :- முகலிவாக்கம்

எனவே, அந்தந்த தொகுதியில் அடங்கிய பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் அனைவரும் இணைந்து, மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் தொடர் பொதுக்கூட்டம் மற்றும் நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு, அந்தந்த ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் அடங்கி உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து மிகவும் சிறப்பான முறையில் எழுச்சியோடு ஏற்பாடுகளை செய்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன்
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

வேளச்சேரி சட்டமன்ற தொகுதிகுட்பட்ட சாந்தி 2வது குறுக்கு தெருவில் சுமார் 30 வருடங்களாக குடிநீர் வசதி இல்லாமல் இருந்ததை அறிந்து அந்தப் பகுதி பொதுமக்களின் கோரிக்கை ஏற்று 177வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ.மணிமாறன் பெருமுயற்சி எடுத்து அதற்கான மதிப்பீடுகள் தயார்செய்து நீண்டநாள் மக்கள் குறைகளை தீர்த்து வைத்து குடிநீர் குழாய் பைப்கள் அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார். உடன் மாநகராட்சி உயர் அதிகாரிகள், உதவி செயற்பொறியாளர்கள் குடிநீர் கழிவுநீர் வாரிய அதிகாரிகள், உதவிச் செயற்பொறியாளர்கள், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் ஒப்பந்தாரர்கள், கழக நிர்வாகிகள் பெருதிரளாக பங்கேற்றனர்.

முதல்வர் பிறந்த நாள்: மார்ச் மாதம் முழுவதும்

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள்!

மாவட்டக் கழகக் கூட்டத்தில் முடிவு!

செஞ்சி, பிப். 27 - கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும், நகராட்சி, பேரூராட்சி, வார்டுகளிலும் ஏழை எளிய பொது மக்களுக்கு மார்ச் மாதம் முழுவதும் நலத்திட்ட உதவிகளையும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரண பொருட்களையும் வழங்க வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ சிறப்புரையாற்றினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் செஞ்சியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் ப. சேகர் தலைமை தாங்கினார்.

மாவட்ட துணை செயலாளர்கள்ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், மாவட்டப் பொருளாளர் ரமணன், செயற்குழு உறுப்பினர்கள் நெடுஞ்செழியன், சீனி ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செயற்குழு உறுப்பினர் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது கூட்டத்தில் கழகத் தலைவர், முதலமைச்சர் திராவிட தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்தநாள் விழாவை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் நகராட்சி பேரூராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் மார்ச் மாதம் முழுவதும் கழக இருவண்ண கொடியினை ஏற்றி வைத்து பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரண பொருட்களை வழங்கியும், ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு அறுசுவை உணவினை வழங்க வேண்டும் என்றும், முதலமைச்சரின் பிறந்தநாளில் அனைத்து பகுதிகளிலும் முதலமைச்ச ரின் அனைத்து சாதனைகளை விளம்பரப்படுத்திடவேண்டும் .

மார்ச் 9ஆம் தேதிகழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் திருச்சியில் நடைபெறும் தி.மு.க. மாநாட்டில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின்சார்பாக வாகனங்கள் மூலம் பெருமளவில் தி.மு.க. வினர் கலந்து கொள்வது எனவும்,

கழகத் தலைவர் , முதலமைச்சரின் வேண்டுகோளின் படி விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சி மயிலம் திண்டிவனம் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து ஒன்றியம் நகர, பேரூர், ஊராட்சி கிளைக் கழகங்களில்பிப்ரவரி 23 முதல் மார்ச் 8ஆம்தேதி வரை வெல்லும் தமிழ்ப் பெண்கள் ஸ்டாலின் படை பரப்புரையை சிறப்பாக நடத்துவது எனவும்,

இந்திய தேர்தல் ஆணையம் பிப்ரவரி 23ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது இதில் விடுபட்ட வாக்காளர்களை சேர்த்திடும் வகையில் கழக நிர்வாகிகள் தோழர்கள் முன்னின்று செயல்படுத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீதாபதி சொக்கலிங்கம், செந்தமிழ்ச் செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை, ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், ராஜாராமன், அண்ணாதுரை, மொடையூர் துரை, இளம்வழுதி, மணிமாறன், செழியன், விஜயராகவன், பச்சையப்பன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், அனந்தபுரம் நகர செயலாளர் சம்பத்,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், செஞ்சி ஒன்றிய துணைச் சேர்மன் ஜெயபாலன், அணி அமைப்பாளர்கள் ஆனந்த், கோபிநாத், பிரசன்னா, திலகவதி, ராஜசக்தி, கே அன்சாரி , திருமலை, ஜி. ரவிச்சந்திரன், டாக்டர் சக்தி பிரியன், எஸ். விஜயராகவன், சிவகாமி, ரோமியன் உள்ளிட்ட மாநில மாவட்ட ஒன்றியநகர பேரூராட்சி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு!

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், அஞ்செட்டி ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.பெரியநாயகம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 26.02.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.